தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, சித்திரை 22

2012 மே 4, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை."

இயற்கையான அறிவுக் கூர்மையும், உயர்வான நூலறிவும், கூர்மையும் ஒருசேரப் பெற்றவர்களுக்குத் தீர்த்து வைக்க முடியாத மிக நுட்பமான சூழ்ச்சிகள் என்று எதுவும் உண்டோ? இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

வட்டாட்சியர் அலுவலகம்

***2750—திருமதி எஸ். கணிதா சம்பத்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதியில் புதியதாக வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்பொழுது* point of order *எல்லாம் கிடையாது.* Please sit down.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல "கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று சொல்வார்கள். ஆனால், கேட்காமலேயே கொடுக்கக்கூடிய மனித நேயம் மிக்க தலைவியாக இருப்பவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னாலே, நான் மானியக் கோரிக்கை அறிவிப்பிலே இதுகுறித்து வெளியிட்டிருக்கிறேன். 5-வது அறிவிப்பாக உங்களுடைய மதுராந்தகம் வட்டாட்சியர் அலுவலகம் புதிதாகக் கட்டித் தரப்படும் எனக் கூறியுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். என்னுடைய மதுராந்தகம் தொகுதியின் வட்டாட்சியர் அலுவலகம் பழமைவாய்ந்தது. அந்தக் கட்டடம் 1903-ல் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பழமைவாய்ந்த கட்டடம். அந்தக் கட்டடத்தில் வட்டாட்சியர் அலுவலகம், பத்திரப் பதிவுத் துறை மற்றும் கருவூலம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவை இயங்கிக்கொண்டு வருகின்றன. சுமார் 100 ஆண்டுக் காலமாக ஒரே கட்டடத்தில் இயங்கிக்கொண்டு வருகின்றன. போதிய இட வசதி இல்லாததால் மழைக் காலங்களில் அலுவலகப் பணிகளைச் செய்ய முடியாத நிலை உள்ளது. நம்முடைய அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், ஒரு தொகையை ஒதுக்கி ஆணையிட்ட அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

2012 மே 4]

திரு. மு. ராஜநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் வணங்குகிறேன். அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழமைவாய்ந்ததாகவும், கட்டடம் போதிய வசதி இல்லாததனால் மாண்புமிகு அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டடம் வழங்குவதற்கு ஆவன செய்ய தங்கள் வாயிலாக வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிதாக 5 வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்காக அரசு நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறது. அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம்; காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு மற்றும் மதுராந்தகம்; திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டாட்சியர் அலுவலகம்; மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம், இந்த 5-ம் இப்பொழுது எடுக்கப்பட்டு 1,084.25 இலட்சம் ரூபாய் செலவிலே அவற்றைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய பூம்புகார் தொகுதிக்கு உட்பட்ட குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதற்கு இடத்தைத் தேர்வு

செய்ததற்குப் பிறகு, வருகின்ற ஆண்டில் அதைப் பரிசீலனை செய்து புதிதாக கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

205—

துணை மின் நிலையம்

***5362—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, வி. கைகாட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரியலூர் தொகுதி, வி. கைகாட்டியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3-வது முறையாக முதலமைச்சராக பதவியேற்ற உடனேயே பேரையூர் தாலுகாவில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிவித்திருக்கிறார்கள். அது இந்த ஆண்டே துவங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.*